உ

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

# பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன்

# நூற்றாண்டு நினைவுச் சொற்பொழிவு - 2024



**பாடசாலைகளில் விழுமிய மற்றும் ஆன்மீகக் கல்வி மூலம்
மனித நடத்தைகளை மேம்படுத்தல்.**

---

**கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்**
ஸ்தாபகப் பீடாதிபதி,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி*

**பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன்**

# நூற்றாண்டு நினைவுச் சொற்பொழிவு
# 2024

நினைவுரை:

**பாடசாலைகளில் விழுமிய மற்றும் ஆன்மீகக் கல்வி மூலம் மனித நடத்தைகளை மேம்படுத்தல்.**

உரைஞர்

**கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்**

ஸ்தாபகப் பீடாதிபதி,

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.



# வாழ்த்துச் செய்தி

**திரு. தி. ஜெயக்காண்டீபன்**
*பீடாதிபதி*
*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி*

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுவதை யிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இவ்வகையில் எமது கல்லூரியில் வருடா வருடம் நடைபெறும் பேராசிரியர் சு. வித்தியானந்தன் நினைவுப் பேருரை இந்த வருடம் எமது கல்லூரியின் ஸ்தாபகப் பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் அவர்களால் மேற்கொள்ளப்படுவது சிறப்பானது. வருகை தந்த அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது மண்ணின் மிக உயர்ந்த தமிழ்ப் பேராசிரியராக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராக, மிக உயர்ந்த தமிழ்ப் பற்றாளராகத் திகழ்ந்து நான்காது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் வெற்றிகரமாக நடத்திய மிகப்பெரும் ஆளுமையாளர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள். ஈழத் தமிழ் பாரம்பரிய நாட்டுக் கூத்துக்களைக் காப்பாற்றி, அவற்றை உயர் கலைகளாகப் பல்கலைக்கழக ஆற்றுகைகளில் சேர்த்த பற்றாளர் எனப் பல பரிமாணங்களைக் கொண்டவர் பேராசிரியர் சு. வித்தியானந்த அவர்கள்.

அவருடைய அறக்கட்டளை சார்பாகவும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சார்பாகவும் கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்கள் இந் நினைவுப் பேருரையை நிகழ்த்துவதில் கல்லூரிச் சமூகம் பெருமை கொள்கின்றது.

இன்றும் எமது கல்லூரி வளர்ச்சியில், உயர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள பெரு மனிதர் கலாநிதி கமலநாதன். அவருடைய ஆளுமை, ஆற்றல், கல்விப் பணி உயர்வானது. அவர் பல்லாண்டு நலமே வாழ வித்தக விநாயகரைப் பிரார்த்திக்கின்றேன்.

சமகாலக் கல்வியில் ஆன்மீக ஒழுக்க நெறிகள் அவற்றின் பிரயோகம் மிக அவசியமானது. ஆசிரியர் கல்வியில் இவ் எண்ணக்கருவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. இவ் விடயம் தொடர்பாக நினைவுப் பேருரை ஆற்றுவது மிகுந்த பயனளிக்கும் என்ற வகையில் மதிப்பார்ந்த கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களை பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின் நினைவுப் பேருரையை ஆற்ற வருமாறு பணிவுடன் அழைக்கின்றேன். மற்றும் உங்கள் அனைவரையும் அன்போடு வரவேற்று மகிழ்கின்றேன்.

நன்றி

*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி*

**பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் நூற்றாண்டு**

# நினைவுச் சொற்பொழிவு -2024

***கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்***

**தலைப்பு:**

**பாடசாலைகளில் விழுமிய மற்றும் ஆன்மீகக் கல்வி மூலம் மனித நடத்தைகளை மேம்படுத்தல்.**

**அறிமுகம்.**

எல்லாம் வல்ல வித்தக விநாயகர், நல்லூர் முருகப் பெருமான் பாதார விந்தங்களைப் பணிந்து,

இங்கு வருகை தந்திருக்கும் அனைவருக்கும் எனது பணிவான வணக்கம். பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் நூற்றாண்டு விழாவிலே அவரது நினைவுச் சொற்பொழிவினை ஆற்றுவதற்கு சந்தர்ப்பத்தை எனக்களித்த யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் மதிப்பார்ந்த பீடாதிபதி திரு.தி.ஜெயக்காண்டீபன் அவர்களுக்கும் உறுதுணையாக நின்ற உபபீடாதிபதி திரு.பா.பாலகணேசன் அவர்களுக்கும் உதவி நல்கிய கல்லூரியின் முதலாவது உப பீடாதிபதி கலாநிதி. பா.தனபாலன் அவர்களுக்கும் கல்லூரிச் சமூகத்தினருக்கும் முகிழ் நிலை ஆசிரியர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

புலமைப் பெருநிதி பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் பற்றிய பல பதிவுகளை, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இன்றும் (12.05.2024) நேற்றும் (11.05.2024) நடைபெற்ற அவரது நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளில் இருந்து அறிந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெற்ற நீங்கள் அதிஷ்டசாலிகளே.

அவரைப் பற்றிய தகவல்கள் பலவற்றை நீங்கள் உங்கள் நினைவு வங்கியில் வைப்பிலிட்டிருப்பீர்கள். அவற்றை நிலையான வைப்பில் இட்டுக் கொள்ளுங்கள்.அவை உங்கள் வாழ்க்கைக்கு என்றும் உதவும் அமுத பொக்கிஷங்கள். அருமருந்துகள்.

நிறையவே அறிந்துகொண்டீர்கள் என்பதால் நான் இங்கு அவற்றை மீண்டும் மீட்டு உங்களைச் சலிப்படையச் செய்ய மாட்டேன்.

அவரிடம் பாடம் கேட்க முடிந்தவர்கள் பாக்கியசாலிகள்.

அவருடன் பழகும் சந்தர்ப்பம் பெற்றவர்கள் கொடுத்துவைத்தவர்கள்.

இவை யாவற்றையும் நிறைவாகப் பெற்றவன் நான் என்பதால் அந்தப் பெரிய மகானிடமிருந்து பெற்ற கல்வியறிவுடன் வாழ்க்கை முறைமை யியல்களில் சிலவற்றை(3) இங்கு அனுபவமாக முன்வைத்து இன்றைய விடயத்துக்கு வரவுள்ளேன்.

**அனுபவம் - 1**

பேராசிரியர் வித்தியானந்தனிடம் இருந்து நான் கற்றுக் கொண்ட நல்ல இயல்புகள் பல. அவற்றில் ஒன்று, “ஏதாவது தேவைக்காக அவருக்குக் கடிதம் எழுதினால் கடிதம் அனுப்பி மூன்று அல்லது நான்காம் நாள் அதற்குரிய பதில் எமக்குக் கிடைத்து விடும்.”

நான் ஒரு தடவை ஒரு தேவை கருதி கடிதம் ஒன்றை அவருக்கு அனுப்பியிருந்தேன். எதிர்பார்த்தது போன்று பதில் கடிதம் வரவில்லை. நான்கு நாட்கள். ஐந்து நாட்கள் என நாட்கள் கடந்து சென்றன.

பதில் கடிதம் கிடைக்காததால் எனக்குள் ஒருவித பயம் தோன்றி விட்டது. நான் ஏதாவது தவறாக எழுதிவிட்டேனோ?அல்லது என்ன காரணமாக இருக்கும் என்று பலவாறாக யோசித்து,யோசித்துக் குழம்பியி ருந்தேன்.

சரியாக ஒரு கிழமையில் அவரிடமிருந்து கடிதம் வந்தது. ஆவலுடன் கடிதத்தைப் பிரித்து வாசிக்கத் தொடங்கினேன்.

அதில் "அன்புள்ள கமலநாதன் அறிவது, யாருக்காவது கடிதம் எழுதும் போது உமது முகவரியை முதலில் மேலே எழுதிக் கடிதத்தை ஆரம்பிக்கப் பழகிக் கொள்ளுங்கள் அது மற்றவர்களுடைய சிரமத்தைக் குறைக்கும்."

பின்னர் எனது கடிதத்துக்கான பதில் அவரது கைகளாலேயே எழுதப்பட்டிருந்தது.

எனது தவறினை உணர்ந்து கொண்டேன். அன்றிலிருந்து இன்று வரை எந்தக் கடிதம் எழுதினாலும் முதலில் எனது முகவரியை எழுதத் தவறுவதில்லை.

அப்பொழுதெல்லாம் பேராசிரியர் வித்தியானந்தன், அவரது வழமையான தனது கொடுப்புச் சிரிப்புடன் என் பக்கத்தில் இருக்கத் தவறியதுமில்லை.

**அனுபவம் - 2**

பேராசிரியர் வித்தியானந்தன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராகப் பதவி வகித்தவேளை. நான் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆசிரியர்.

ஒரு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டி இருந்தது. அதற்குக் கடும் போட்டி.

ஆதலால், துணைப் வேந்தரிடம் ஒரு நற்சான்றிதழ் பெற்றுச் செல்வது நல்லது என்று முடிவெடுத்து அவர்அலுவலகம் சென்றேன். அலுவலக உதவியாளரிடம் எனது வருகையைத் துணைவேந்தரிடம் தெரிவிக்கும்படி கூறி அமர்ந்திருந்தேன்.

அவர் சென்று கூறினார்.

தாமதமின்றி துணைவேந்தர் உள்ளே அழைத்தார்.

சென்றேன்.

"வாரும் காணும்? என்ன விஷயம்?" என்றார் முகமலர்ச்சியுடன்.

நான் நின்றவாறே "எனக்கு Character ஒன்று வேண்டும் sir" என்றேன்.

அவர் முகத்தில் இருந்த மலர்ச்சி சடுதியாக மறைந்தது. எதுவும் பேசாது தனது வேலைகளைத் தொடரலானார். அலுவலக மேசையில் இருந்த கோவைகள் ஒவ்வொன்றாக பரிசீலித்து கையொப்பமிட்டவாறு தொடர்ந்தார்.

வழக்கமாக வரவேற்று இருக்கையில் அமரச் சொல்பவர் .

சொல்லாததால் நான் இருக்கவில்லை. நின்றேன். அவர் வேலையைத் தொடர்ந்தார்.

கோவைகள் பார்வையிட்டு முடிந்ததும். என்னை நோக்கினார்.

"திரும்பவும் என்ன காணும் வேணும்" என்றார். நான் தயங்கியபடி "எனக்கு character ஒன்று வேண்டும் sir" என்றேன்.

"உமது character உம்மிடம்தான் இருக்கும். அதை எப்படி நான் தாறது?" என்று கூறி என்னை ஒருமாதிரிப் பார்த்து நின்றார்.

நான் ஒன்றும் புரியாது திகைத்து நின்றேன். எனது தவிப்பை உணர்ந்த அவர், "நீர் காணும் இப்போ பட்டதாரி. சரியாகக் கதைக்க வேண்டும். "Character certificate" வேண்டும் என்று சரியாகக் கேட்கவேண்டும்." என்று முடித்து தனது கையாலேயே அதனை உடனே எழுதத் தொடங்கினார்.

முன்னால் இருந்த கதிரையைக் காட்டி இருக்கும்படி பணித்து சிறிது நேரத்தில் எழுதித் தந்தார்.

நன்றிகூறிப் புறப்படலானேன். தலையசைத்து, அலுவலக ஊழியரை வரும்படி கூறிச் செல்லும் என்றார்.

அங்கே முன்பிருந்த கடுமையில்லை. சாந்தமாகக் கூறினார்.

அதுதான் பேராசிரியர் வித்தியானந்தன்.

அந்த சான்றிதழையும் அவரது கையெழுத்தையும் நீண்டகாலம் பாதுகாத்து வைத்திருந்தேன். என் வீடு இராணுவத்தால் அழிக்கப்பட்ட பொழுது அதுவும் அழிந்தமை பெரும் துர்ப்பாக்கியமே.

**அனுபவம் -3**

அன்று பேராசிரியரின் கடைசிச் சகோதரரும் எனது மிக நெருங்கிய நண்பரும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் இலங்கைப் பல்கலைக் கழகத்திலும் என்னுடன் ஒன்றாகக் கற்றவருமான திரு.சு.குணநிதி அவர்களின் திருமண நாள்.

பேராசிரியரின் தமிழகம் இல்லத்தில் நான் மாப்பிள்ளையை ஒப்பனை செய்யும் பணியில் இருக்கிறேன்.

வாழையிலையில் கோடு வெட்டி, அவர் நெற்றியில் அழகாக குறி வைத்துக் கொள்கின்றேன்.

அச்சமயம் பேராசிரியர் வித்தியானந்தன் மிக நேர்த்தியாக வேட்டி, நஷனல், உத்தரியம் அணிந்து தனது சகோதரரின் அலங்காரம் காண மணமகன் அறைக்கு வந்தார்.

நான் சற்று விலகி நின்றேன்.

தனது கடைக்குட்டி சகோதரரை ஏற இறங்கப் பார்த்தவர், என்னைத் திரும்பிப் பார்த்து "நெற்றியில் சந்தனப் போட்டு வைத்து விடும்" என்றார்.

நான் சந்தனத்தை எடுத்து வழமைபோல் ஆட்காட்டி விரலால் குழைத்து அதே விரலால் அவர் நெற்றியில் இடச் சென்றேன்.

பேராசிரியர் "நான்காவது விரலால் வையுங் காணும் என்றார்"

நான் அப்பாவியாக எனது கையில் சின்ன விரலில் இருந்து எண்ணினேன் , ஆட்காட்டி விரல் நான்காவதாக வந்தது.

குழப்பத்துடன் நண்பரைப் பார்த்தேன்.

மீண்டும் பேராசிரியர் "மற்றப் பக்கமாக எண்ணும்" என்றார். மெல்லிய சிரிப்புடன்.

இப்போ கட்டைவிரலில் இருந்து எண்ணி நான்காவது மோதிர விரலால் நண்பருக்குத் திலகமிட்டேன். மிக நேர்த்தியாக திலகமிட முடிந்தது.

பேராசிரியர் திருப்தியுடன் அங்கிருந்து சென்றார்.

நான் மீண்டும் சந்தனத்தை எடுத்து எனது நெற்றியில் அதே விரலால் எனக்கு வைத்துப் பார்த்தேன். சரியாக நெற்றியின் மையத்தில் பொட்டு அமைந்தது.

இந்த சந்தர்ப்பத்தை ஒருநாள் எனது குரு “சொக்கன்” அவர்களிடம் கூறினேன்.

அவர் ஆட்காட்டி விரல் ஆணவத்தைக் குறிக்கும் விரல். அதனால் அதன் மூலம் பொட்டு வைக்கக் கூடாது என்ற மேலதிக விளக்கத்தையும் தந்தார்.

பேராசிரியர் எமது பாரம்பரிய செயற்பாடுகள் ஒவ்வொன்றிலும் அவ்வளவு ஆழமான அவதானிப்புக் கொண்டிருந்தார்.

இப் பின்னணிகளில் பேராசிரியர் பெரிதும் நேசித்த தமிழர் பாரம்பரியம், அதனோடு இணைந்து ஒரே நேர்கோட்டில் பயணித்த தனி மனித ஒழுக்கம், விழுமியம், தனி மனித நடத்தை விருத்தி, சமுதாய மேம்பாடு தொடர்பான விடயங்களின் நிலை, போக்கு, தேவை பற்றிச் சிந்திப்பதே இன்றைய உரையின் நோக்கமாகும்.

# பாடசாலைகளில் விழுமிய மற்றும் ஆண்மீகக் கல்வி மூலம் மனித நடத்தைகளை மேம்படுத்தல்.

தனி மனித ஒழுக்கம், தனி மனித மதிப்பு, நல்வாழ்வு, சுய மதிப்பு, போன்றவற்றை முன்னேற்ற விழுமியக் கல்வி கருவியாக அமைகின்றது. சுருங்கக் கூறின், விழுமியக் கல்வி என்பது நல்ல பழக்க வழக்கங்களைக் கற்பித்தல் மற்றும் பயிற்றுவித்தல் என்று கூறலாம்.

உலகளாவிய ரீதியில் கல்விக்குப் பொறுப்பான அமைப்பான ஐக்கிய நாடுகள் தாபனத்தின் கல்வி, விஞ்ஞான, பண்பாட்டு அமைப்பு (UNESCO) கல்வியின் முழுமையான பெறுபேற்றினை நவீன உலகில் ஆன்மீக விழுமிய விருத்தி நடத்தைகள் மூலமே பெற்றுக்கொள்ள முடியும் என்று எடுத்தியம்பியுள்ளது.

வளர்ச்சி பெற்றுள்ள விஞ்ஞானம் மனித சமூகத்துக்கு ஒரு புறம் பல்வேறு நன்மைகளைச் செய்திருந்தாலும் மறு புறம் பல பிரச்சினைக ளுக்குக் காரணமாக உள்ளதை உலக சமூகம் கவலையுடன் நோக்குகின்றது. விஞ்ஞான வளர்ச்சி தந்து நிற்கும் நன்மைகளைப் புறந்தள்ளி தீய பக்கம் மனிதம் நாட்டம் கொள்வதால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

ஒரு நாணயத்துக்கு இரண்டு பக்கங்கள் போன்று மனித வாழ்விலும் நன்மை, தீமை என்ற இரண்டு நிலைகளையும் எதிர்கொள்ள வேண்டியி ருக்கும். அங்கே எதிர் கொள்ளும் தீய பக்கங்களை வெற்றி கொள்வதற்கு ஆன்மீக விழுமியச் செயற்பாடுகளே துணை நிற்கும் என்பது நிதர்சனமானது.

இந்த ஆன்மீக விழுமியச் செல்நெறிக்கு நவீன உலகு முக்கியம் கொடுக்காமையே இன்றைய மனித குலத்தின் அவல வாழ்வுக்குக் காரணம் என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லையென அவதானிக்கப்பட்டுள்ளது.

மனிதம் மலினமாக்கப்பட்டு வன்முறைகளும் கலவரங்களும் யுத்தங்களும் போதைப்பொருள் பாவனைகளும் பெருகி, கண்டதே காட்சி கொண்டதே கோலமென கலாசார சீரழிவுக்குள் உலகம் சிக்கித் தவிக்கின்றது.

இவ்வழிவுகளில் இருந்து உலகத்தைக் காக்க ஆன்மீக விழுமியக் கல்விச் செயற்பாடுகளில் கவனம் கொள்ளப்பட்டுள்ளது. எல்லா நாடுகளும் தத்தமது கல்விச் செல்நெறி ஊடாக அதனை நடைமுறைப்படுத்தத் தொடங்கி யுள்ளன. மனிதத்துவ மகிழ்ச்சியான வாழ்வு இதனூடாகப் பிரதிபலிக்கின்றது என்ற வகையில், இன்று ஆசிரியர் கல்வியில் விழுமியப் பண்புகள் மிகுந்த முக்கியத்துவம் உடையதாகக் கொள்ளப்பட்டுள்ளன.

**விழுமியக் கல்வி**

மானிட வாழ்வில் விழுமியம் (VALUE) என்ற சொல்லானது, கனதியான பெறுமதியுடையதாகக் கருதப்படுகின்றது. விழுமியம் என்பதற்கு value என்ற ஆங்கிலச் சொல்லுடன் பொருள் நோக்கின் பெறுமதி, மதிப்பு என்ற கருத்துத் தொனித்தாலும், அதன் பொருள் அதனிலும் ஆழமானதாகவும் அகலமானதாகவும் இருப்பதை உணர்ந்து செயற்பட வேண்டும்.

விழுமியம் என்பது தனி மனிதன், சமூகம், வாழ்க்கை என்பவற்றை வளப்படுத்தி அவற்றை அர்த்தமுள்ளதாக மாற்றும் குணநலப் பண்பாகும். மனிதர் ஒவ்வொருவருக்குள்ளும் தனி மனித விழுமியங்களான அன்பு, தைரியம், ஒழுக்கம், அகிம்சை, அறம்செய்தல் , சமாதானம், நேர்மை, விட்டுக் கொடுத்தல் போன்ற விழுமியங்கள் இருத்தல் வேண்டும் எனும்போது விழுமியத்தின் ஆழ்ந்த நோக்கை அறிந்து கொள்ள முடிகின்றது.

விழுமிய ஆன்மீகக் கல்வியில் முக்கியமாக மனிதநேயப் பண்புகள் உள்ளடக்கம் பெறுகின்றன. உயிர்களிடத்து அன்பு செலுத்துதல், ஜீவ காருண்யம், கருணை, மற்றவர்களுக்கு உதவுதல் போன்றவை முக்கியமாகக் கருத்திடுகின்றன.

**விழுமியக் கல்வியும் மாணவர்களும்**

இந்த விழுமிய ஆன்மீகக் கல்வியினை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக இலங்கை கல்வி அமைச்சு அதிபர்கள் ஊடாக செய்த முன் ஆய்வில் மாணவர் ஒழுக்கம் தொடர்பாக பின்வரும் பிரச்சினைகள் தெளிவாகியுள்ளன.

- குழப்பமும் வன்முறைகளும் கொண்ட மாணவ நடத்தைகள்.
- கட்டிளமைப் பருவ மாணவர் அதிபர், ஆசிரியர், பெற்றோரை மதிக்காமை.
- பாடசாலை சட்ட விதிகளை மதியாமையும் மீறலும்
- பொய் கூறுதலும் முறைகேடான போக்கும்.
- பாடசாலைச் சொத்துக்களை சேதமாக்குதல்.
- கட்டிளமைப் பருவ பொருந்தாக் காதல் பிரச்சினை.
- மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாதவர்களாயிருத்தல்
- கற்பதில் ஆர்வமின்மை.
- போதைப் பொருள் பாவனையும் பாடசாலைக்கு வெளியேயுள்ள குழப்பக் காரர்களுடன் (பிறழ் நடத்தையாளர்கள்) தொடர்பும்.
- மாணவரிடை பல்வேறு உளவியல் தாக்கங்கள் காணப்படல்.
- பொருத்தமற்ற கைத்தொலைபேசிப் பாவனை, இணையத்தின் செல்வாக்கு.
- மற்றவர்க்கு உதவும் மனப்பான்மையின்மை..
- மாணவ நடத்தைகளில் நேர்மைத்தன்மை மட்டுப்பாடு.

இவ்வாறு பாடசாலைகளில் குறித்த அளவு மாணவர்கள் விழுமியப் பண்புகளில் பிறழ்வு நிலையில் காணப்படுவதால் பாடசாலை பாதிப்புக்குள்ளாகின்றது.

பாடசாலைக் கல்வியிலும் மாணவர்களது நடத்தைகளிலும் காணப் படக்கூடிய மட்டுப்பாடுகள் நேரடியாக சமூகத்தினைப் பாதிக்கின்றன. அது அந்தக் குழுமத்தின் எதிர்காலத்தைக் கேள்விக் குறியாக்கி அந்த அந்த சமூகத்தின் இருப்பில் பாதிப்பினை ஏற்படுத்திவிடும் நிலையையும் தோற்றுவிக்கலாம்.

மானிடப் பண்பாட்டியல் ஆய்வாளர்களது கருத்துப்படி மனிதன் தனது அனுபவங்களுக்கு ஏற்ப தனது நடத்தைகளைப் பழகிக் கொள்கின்றான். இந்தப் பழக்கங்கள் (Habits) நாளடைவில் அவனது வழக்கமாகி விடுகின்றது. (Customs) அந்த வழக்கங்களே காலப் போக்கில் அவன் சார்ந்த சமூகத்தி னுடைய நம்பிக்கைகளாகி (Beliefs) விடுகின்றன. எனவே, ஒவ்வொரு மனிதனது நடத்தையும் அவன் சார்ந்த சமூகத்தினது நம்பிக்கைகளின் பலத்தினைப் பிரதிபலிக்கின்றன.

நம்பிக்கைகள் சந்ததிகளூடாக விழுமியங்களாக கையளிக்கப்பட்டு பின்பற்றப்பட்டு வருகின்றன. இவை சமூகத்தின் நெறியியல்சார் பண்பாட்டின் பிரதான கூறுகளாகவும் அமைந்து விடுகின்றன. மேலும், இவை ஒரு சமூகத்தினது ஒழுக்கம் மற்றும் வாழ்க்கை முறையினை விளக்குவதாகவும் உள்ளன.

தமிழர்தம் பண்பாட்டின் அனைத்துக் கூறுகளுமே உலகளாவிய நம்பிக்கைகள், நீதிமுறைசார் உயர்வான கருத்துக்கள் ஆகியன பரவிக் கிடந்தாலும் அங்கே உளவியலும், தத்துவமும், பண்பாடும் சிறப்பான தொடர்புகளைக் கொண்டதாக இருப்பது பெருமைக்குரியதே.

**விஞ்ஞானமும் மெய்ஞானமும்**

ஆனாலும் இன்றைய விஞ்ஞான வளர்ச்சியும் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியும் அதனோடிணைந்த பூகோளமயமான செயற்பாடும் உலகை உள்ளங்கைக்குள் சுருக்கி விட்டாலும், இன்றைய அரசியலில் காணப்படும் குழப்ப நிலையும் பொருளாதார ஸ்திரமின்மையும் கழுத்தறு போட்டியில் மனித வாழ்வும் ஆன்மீகம் மற்றும் விழுமிய நடைமுறைகளின் மீது அதிர்வுகளையும் சவால்களையும் தோற்றுவித்து பெரும் சந்தேகத்தினைத் தோற்றுவித்துள்ளது. அது எம் பாடசாலை மாணவர்களிடையே, எமது இளைஞர்களிடையே பரவ அதன் விளைவாக அவர்களும் எமது விழுமியம் மீதும் ஆன்மீகச் செயற்பாடுகள் மீதும் சந்தேகமுற்று அவற்றைப் பின்பற்றுவதில் அக்கறை காட்டாததுடன், கேள்விகளும் எழுப்பும் நிலையும் உண்டு என்பது சிந்திக்க வைக்கின்றது.

ஏன் ?எதற்கு? அப்படி நடக்காவிட்டால் என்ன?வருவது வரட்டும், அது எனக்குத்தானே! போன்ற தான்தோன்றித்தனமான வினாக்களும் விடைகளும் அவர்களிடமிருந்து வெளிவருவதுடன், தவறான நடத்தைக ளையும் பிரதிபலித்துக் கொள்கின்றனர். இது பெரும் கவலைதரும் போக்காகும். எமது கலாசார பண்பாட்டுக் கூறுகளுக்கு அவை பெரும் சவாலாக அமைகின்றன.

இந்த சவால் வெற்றி கொள்ளப்படாவிட்டால் எமது எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும் என்பதில் சந்தேகமில்லை. ஏற்கெனவே பல்வேறு சக்திகளின் நெருக்கடிகளால் எமது இருப்புத் தடம் தளம்பிக்

கொண்டிருக்கின்றது. என்று தடம்புரளுமோ என்ற பயம். இதனைக் கவனிக்க யாருமில்லை. அனைவரும் பணத்துக்காகவும் பதவிக்காகவும் ஓடிக்கொண்டிருக்கிறார்களே தவிர சமூக சிந்தனை சிறிதும் இல்லை. மக்களோ திக்குத் தெரியாத காட்டில் .

## முன்மாதிரியாக வாழ்ந்து காட்டிக் கற்பித்தல்

அது ஒரு புறமிருக்க மறுபுறம் சமூகத்தில் முன்மாதிரியாக இருக்க வேண்டியவர்கள் தமது கடமையில் இருந்து தவறி விடுவதும் பெரும் சிக்கல்களைத் தோற்றுவிப்பதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியதொன்றே. சமூகத்தால் பெரிதும் மதிக்கப்படுகின்ற ஆசிரியர்கள் சிலர் தம் தொழில் மகத்துவ உன்னதம் மறந்து செயல்படுவதால் சமூக விழுமியமே பாதிக்கப் படுகின்றது என்பதை மறந்து விடக்கூடாது.

மாணவராக பாடசாலை வரும் குழந்தைக்கு தாய், தந்தை, சகோதரர், நண்பர், தெய்வம் எல்லாமே ஆசிரியர்தான். குழந்தை ஆசிரியரிடம் தனித்து கல்வியறிவை மட்டும் பெறுவதில்லை. அவரைப் பார்த்து தனது எதிர்கால வாழ்க்கையை தீர்மானிக்கவும் ஒழுங்குபடுத்திக் கொள்ளவும் கற்றுக் கொள்கின்றது.

“இளமையிற் கல்வி சிலையில் எழுத்து” என்பார்கள். எனவே, ஆசிரியர் சகல வழிகளிலும் முன்மாதிரியாளராகத் திகழவேண்டும். எங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் ஒவ்வொரு ஆசிரியர் இருப்பர் என்று கூறுவர். அந்த ஆசிரியர் முன்மாதிரியாளராக, நல்ல வழிகாட்டியாக, ஒழுக்க சீலராக இருந்திரா விட்டால் அது சாத்தியப்பட்டிருக்காது அல்லவா?

ஆகவே, எனது அன்புக்குரிய முகிழ் நிலை ஆசிரியர்களே உள்ளகப்பயிற்சி ஆசிரியர்களே! நீங்கள் முன்மாதிரியாளர்களாக, ஒழுக்க மானவர்களாக திகழ வேண்டிய அவசியத்தை உணர்வீர்கள் என நம்புகின்றோம். உங்கள் நடை, உடை பாவனை மற்றும் ஒவ்வொரு செயற்பாட்டிலும் அவதானமாக இருங்கள். அப்போதுதான் உங்களை மாணவர் மதிப்பர், பெற்றோரும் மற்றோரும் மாணவ சமுதாயமும் வணங்கித் துதிப்பர். அதன்வழி எமது சமூகமும் நல்ல விழுமிய எண்ணங்களைக் கொண்டு உயர்வு பெறும்.

மாணவர்க்கு ஆன்மீக விழுமியக் கருத்துக்களைப் பகிர்வதில் பல வழிமுறைகள் உள்ளன. அவற்றில் முக்கியமானவை மூன்று.

1. ஆசிரியர்கள், பெற்றோர்கள் எமது பாரம்பரிய விழுமிய கருத்துக் களுக்கு அமைவாக வாழ்ந்து காட்டி முன்மாதிரியாளராகத் திகழ்ந்து மாணவரை அவ்வழி பின்பற்ற வைத்துக் கற்றலை உறுதி செய்தல்.

2. விழுமியத்தை கலாசாரம் மற்றும் மத ரீதியிலான கற்பித்தலுடன் இணைத்துக் கற்கவைத்தல்.

3. சமூகத்தில் மக்கள் தாங்களாகவே நல்ல நடத்தைகளையும் நல்ல பழக்க வழக்கங்களையும் கண்டறிந்து அவ்வழி ஒழுகும் போது மாணவனும் அவ்வழி பின்பற்றிக் கற்றுக் கொள்வது இலகுவாகின்றது.

**உண்மை விளக்கம்**

பாடசாலை மாணவரிடத்தும், இளைஞர்கள் மத்தியிலும் விழுமியப் பண்புகளும் ஆன்மீக சிந்தனைகளும் நலிவடைந்து செல்வதற்கு ஒரு வகையில் வளர்ந்தவர்களும் காரணம் என்று விமர்சிக்கப்படுகின்றது. மேற்படி விடயம் தொடர்பாக இளம் சமூகத்தினரிடை தோன்றக்கூடிய சந்தேகங்களுக்கும் அவர்களுடைய வினாக்களுக்கும் தெளிவான விஞ்ஞான அடிப்படையிலான விளக்கத்தை வழங்கத் தவறி விடுகின்றோம்.

மாறாக விழுமியக் கருத்துக்களையும் செயற்பாடுகளையும் அவர்கள் மீது பலாத்காரமாகத் திணிக்கவும் முயல்கின்றோம். அது மேற்படி விடயத்தில் வெறுப்பை ஏற்படுத்தி பின்னடைவுக்குக் காரணமாகி விடுகின்றது.

எந்த ஒரு மனிதனும் தான் வாழும் சமுதாய விழுமியங்கள் தன்மீது திணிக்கப்படுவதை உளவியல் ரீதியாக விரும்புவதில்லை. இயல்பான மன நிலையுடன் அனுபவங்களூடாக அவன் அவற்றைக் கையேற்றுக் கொள்ள அவன் சார்ந்த பாடசாலைகள், சமூக நிறுவனங்கள், சமய நிறுவனங்கள் வாய்ப்பளிக்க வேண்டும். அதற்கான சந்தர்ப்பங்களை ஏற்றாற்போல் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதற்கு உறுதுணை செய்ய வல்லது சமயக்கல்வியாகும்.

### சமயக் கல்வி

எமது நாட்டில் எல்லாப் பாடசாலை மாணவர்களுக்கும் அவரவர் சமயம் சார்ந்து சமயக்கல்வி போதிக்கப்படுகின்றது. மேலை நாடுகள் சிலவற்றில் பாடசாலை மாணவர்களுக்குப் பொதுவாக சகல மதங்களின் தத்துவங்களும் போதிக்கப்படுவதுண்டு.

சமயக் கல்வியின் ஊடாக ஆன்மீக அற ஒழுக்கங்கள், விழுமியங்க ளுக்குத் தம்மை அர்ப்பணிக்கக்கூடியவாறு கற்றல் ஒழுங்கு செய்யப்படல் வேண்டும். ஒவ்வொரு சமயமும் தமக்குரிய நம்பிக்கைகளையும் ஆன்மீகக் கோட்பாடுகளையும் சமூக விழுமிய அறநெறிகளையும் தன்னகத்தே கொண்டுள்ளன. அவற்றைத் தெளிவாக உள்வாங்கி மாணவர்க்கு வழங்கப் படும் சமயக் கல்வி ஊடாக அறநெறி விழுமிய ஒழுக்கம் மற்றும் ஆன்மீகக் கோட்பாடுகளை காரணகாரியத் தொடர்புடன் விளக்கி மாணவர்கள் மத்தியில் வேரூன்ற வைத்தல் வேண்டும்.

சமயக் கல்விமூலம் மாணவர்களிடம் பல்பரிமாண விருத்தியை ஏற்படுத்தும் வண்ணம் திட்டமிடல்வேண்டும். மேலை நாடுகளில் உள்ளது போன்று சகல மதங்களிலும் உள்ள பொதுவான விழுமியக் கருத்துக்களை சகல மாணவரும் பெறும் நோக்கில் திட்டமிடலும் நல்ல பயனைத் தரவல்லது.

இதனை ஆரம்பக்கல்வி வகுப்பிலிருந்து நடைமுறைப்படுத்தின் நல்ல பயனைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று சிபார்சு செய்யப்படுகின்றது.

ஆரம்பக் கல்வி பயிலுபவர்கள் சிறுவயதினர் என்பதால் அவர்களிடம் கதை கேட்பதில் ஆர்வம், போலச் செய்வதில் நாட்டம், கணிப்பில் விருப்பம் போன்றன பொதுவாகவே மிகுந்திருக்கும். அந்த நுட்பங்களை மனதிற் கொண்டு கற்றலைத் திட்டமிடின் இலக்கை எட்ட முடியும்.

### ஆரம்பக்கல்வி

ஆரம்பக் கல்விக்கான கற்பித்தல் நுட்பங்களைச் சற்று விரிவாக நோக்குவோம்.

சிறுவர்கள் தமது தாய் தந்தையர் மீது விருப்பமுடையவராதல் இயல்பு. அந்த விருப்பமுடைமையைப் போல அல்லது அதற்கு ஒரு படி மேலாக தமது

பாட்டன் பாட்டி மீதும் விருப்புடையவராகவுமிருப்பர். தாய், தந்தைய ரிடம் கிடைக்காத சுதந்திரமும் வேறு பலவும் அவர்களிடமிருந்து கிடைக்கலாம் என்பதால் அந்த அளவு அதிகரித்திருக்கலாம். அது எப்படியோ சிறுவர்களுக்கு அந்த விருப்பத்துக்குரியவர்கள் கூறும் விடயங்கள் இலகுவில் மனதில் பதிந்து கொள்கின்றது என்பது உளவியல் உண்மையாகும். அந்த வகையில், அன்புக்குரியவர்கள் பொருத்தமான நடத்தைகளைக் கற்றுக்கொடுக்கின்றபோது அவை இலகுவில் சிறார்களிடம் பதிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது.

இதனை இன்னுமொரு நோக்கில் அணுகின், நடத்தைகளை சிறுவர்க்குக் கற்றுக் கொடுப்பவர்கள் அவர்களின் விருப்பத்துக்குரியவராக தமது நடத்தைகளை ஏற்பாடு செய்து தொடர்ந்து விழுமிய நடத்தைகளைக் கற்றுக்கொடுத்தல் என்பதும் உரிய அணுகு முறையே.

ஏலவே குறிப்பிட்டது போன்று விழுமிய நடத்தைகளைக் கற்பிப்போர் முன்மாதிரியாகத் தொழிற்படவேண்டும். அவர்கள் சரியான விழுமிய நடத்தைகளை மேற்கொள்ளும்போது பிள்ளை அதனைக் கற்றுக்கொள்வது சாத்தியமாகின்றது. போலச் செய்யும் இயல்பு பிள்ளைகளிடம் ஒன்றி இருப்பதால் நடப்பதைப் பார்த்து பழகிக் கொள்ள சந்தர்ப்பம் கிட்டுகின்றது.

- பிள்ளைகள் நற்செயல்களை ஆற்றும்போது அவர்களைப் பாராட்டிக் கௌரவம் கொடுத்தால் அச்செயல் மனதிற் பதிந்து கொள்ள வாய்ப்புண்டு. அந்நேரம் கைகளைத் தட்டி உற்சாகம் கொடுத்தலோ அல்லது கட்டி அணைத்தலோ பெரும் மனக் கிளர்ச்சியை அவர்களுக்கு ஏற்படுத்தி நல்ல பயனைத்தரும். மீண்டும் மீண்டும் அச்செயலில் ஈடுபட அவர்களைத் தூண்டும்.

- பெற்றோர்கள்,ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு கல்வியறிவையும் விழுமிய நடத்தைகளையும் அறியத் தருவதுடன், அவர்களுக்கான சகபாடிகள் குழுக்களையும் தொடர்பாடலுக்கான அறிஞர், பெரியோர் களையும் தெரிவு செய்யும்போது கவனமெடுத்தல் சிறந்தது. நற்பண்புள்ள விழுமிய ஏற்றமிக்கவர்களை இதற்காக அடையாளம் காட்டுதல் பொருத்தமுடையது.

- விழுமிய நடத்தைகள் தொடர்பாக முடிவெடுக்கும் போது சிறுவர்களின் சுயசிந்தனை முன்னெடுப்புக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வழிகாட்டி ஊக்குவித்தல்ஆசிரியர்களதும் பெற்றோர்களதும் கடமையாகும்.

- விழுமிய நடத்திச் செயற்பாடுகளுக்கு வழிகாட்டும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களிடம் அன்பு, கருணை, முகமலர்ச்சி, நேர்மை, நட்பு ஆகிய விழுமிய நற்பண்புகள் மிக்கிருத்தல் வேண்டும். இவை காணப்படு மிடத்து கற்பித்தலில் கவர்ச்சி காணப்படும். சிறார்களும் உற்சாகமாகக் கற்பர்.

- ஆசிரியர்களும் பெற்றோர்களும் பிள்ளைகளுக்கு மதிப்பளிப்பவராகத் தமது நடத்தைகளைத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். பிள்ளைக ளுடன் தோழமையுடன் பழகுதல், அவர்கள் செய்யும் குறும்புகளை இரசித்தலும் சகித்தலும் அவர்களுக்கு அவசியம்.

- பிள்ளைகளின் பிரச்சினைகளைப் புரிந்து, அவர்களின் தேவைகளை நிறைவு செய்பவராக ஆசிரியர்களும் பெற்றோர்களும் இருத்தல் அவர்களின் நற்பண்பு வளர்ச்சிக்கு பேருதவி புரியும் என்பதை நினைவிற் கொள்ளல் வேண்டும்.

இவற்றை அடிப்படையாகக் கொண்டே ஆரம்பக் கல்விக் கலைத்திட்டத்தில் அனைத்துப் பாடங்களும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. மனிதத்துவ விழுமியங்களைக் கட்டி எழுப்பக்கூடிய வகையில் ஆரம்பக்கல்விக் கலைத்திட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

இதனை ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் உள்வாங்கி தமது கற்பித்தலைத் திட்டமிட வேண்டும்.

ஆசிரியர்கள் உயர்ந்த மேதைகள், கல்விமான்கள், வீரர்கள், விஞ்ஞானிகள், ஆத்மீகப் பெரியோர் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகள், விழுமிய முன்மாதிரிகள் ஆகியவற்றை சிறார்களுக்குக் கற்பித்தல் நல்ல பயனைத் தரும்.

அவற்றை மாணவர்களைக் கவரும் கற்பித்தல் முறைமையினைக் கையாண்டு கற்றுத்தருதலும் பயன்தரவல்லது. உதாரணமாக, நாடக

முறையில், உரையாடல் மூலம் அல்லது இணைப் பாடவிதான செயற்பாடு களில் ஈடுபடுத்தல், சித்திரங்கள் வரைவதனூடாக விழுமியக் கருத்து வெளிப்பாட்டை உணர்த்த சந்தர்ப்பம் அளித்தல், அழகியல் செயற்பாடு களின் ஊடாக விழுமிய வகிபாகங்களை எடுத்துக் காட்டல், பாடசாலையை சமூகத்துடன் இணைத்து செயற்றிட்டங்களை ஒழுங்கு செய்து கொள்ளல், கலை நிகழ்ச்சிகள், விழாக்கள் மூலம் விழுமியக் கருத்துக்களை உணர்த்துதல் போன்றன குறிப்பிடக்கூடியன.

ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கான விழுமியக் கருத்துக்களைக் கற்பிக்கும் நுட்பங்களைத் தொடர்ந்து இடைநிலைக்கல்வி மாணவர்க ளுக்கான கற்பித்தல் நுட்பங்களையும் சிறிது நோக்குவோம்.

**இடைநிலைக்கல்வி**


இடைநிலைக் கல்வி மாணவர்களுக்கான கற்றல் கற்பித்தல் செயற் பாடுகள் பல மாற்றங்களுக்கு உள்ளாகவேண்டியுள்ளது. அந்த மாணவர்களது வளர்ச்சி, அறிவு மட்ட உயர்வு ஆகியவற்றைப் பொறுத்து அந்த மாற்றங்கள் அவசியமாகின்றன. இவர்களது ஆன்மீக விழுமியக் கல்விச் செயற்பாடுகள், நடத்தை விருத்திச் செயன்முறைகள், தகாத நடத்தைகளை இலகு முறையில் தடுத்தல், நேர்மனப் பாங்கை வளர்த்தல் என்றவாறு ஒழுங்கமைக்கப் படவேண்டும்.

எந்த ஒரு சூழ்நிலையிலும் சிறப்பான நடத்தைகளைக் கொண்ட பிள்ளைகள் வாழும் சமூகமே நல்லதொரு சமூகமாகும். ஆனால், இன்றைய சமூகத்தில் காணப்படும் குழப்பங்கள், முரண்பாடுகள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள், அளவற்ற விபத்துக்களால் ஏற்படும் மரணங்கள் காரணமாகப் பிள்ளைகளின் மனதில் கலக்கம் உருவாகின்றது. இவை யாவும் அன்றாடம் ஒவ்வொரு பிள்ளையின் சூழலிலும் தோன்றி விடுகின்ற நிலையில், பிள்ளைகள் உளத்தளவில் பலத்த பாதிப்புக்குள்ளாகி உள்ளார்கள்.

இத்தகைய சமூகத்தில் மிக அவதானமாகச் செயற்படவேண்டிய பொறுப்பு ஒவ்வொரு குடும்பத்துக்கும் உண்டு. குடும்பம் மாத்திரமன்றி பாடசாலைகள், சமூக நிறுவனங்களான ஆலயங்கள்,சனசமூக நிலையங்கள் போன்றன ஒன்றிணைந்து அல்லது தனித்தனியாக இளம் பிள்ளைகளுக்கு நல்ல நடத்தைகளைத் தெளிவாக்கி ஆற்றுப்படுத்த ஆவன செய்தல் வேண்டும்.

பிள்ளைகளை சமநிலை ஆளுமை உள்ளவர்களாக வளர்த்தெடுக்க வேண்டும். தனி மனித ஆளுமை விருத்திக்கும் நுண்மதி வளர்ச்சிக்கும் மனவெழுச்சி சீராக்கத்துக்கும் வேண்டிய கல்வியை வழங்கி அவரிடத்து சுயமாக சிந்திக்கும் திறன், சுய ஒழுக்கம் சுய முகாமைத்துவ மேன்மை உள்ளவர்களாக வளர்க்கப்படும்போது அவர்கள் ஆளுமை உயர்வடைய வாய்ப்பு ஏற்படும். அங்கு சமநிலை ஆளுமை தோற்றம் பெற்று விழுமிய நடத்தைகள் இலகுவாக்கப்படலாம்.

**பூரண சமநிலை ஆளுமையின் பிரதான கட்டமைப்பு**




இப்பருவ பிள்ளைகளிடை குழு உணர்வை வளர்த்து குழுவாகச் செயற்பட பாடசாலைகளிலும் சமூகத்திலும் சந்தர்ப்பங்கள் வழங்கப்படும் போது விழுமிய நடத்தைகள் இயல்பாகவே அவர்களிடத்து வளர்ச்சிபெற முடியும் என்று நம்பப்படுகின்றது. குழு செயற்பாட்டில் நல்ல பல நடத்தைகள் வளர்த்தெடுக்கப்படுகின்றன. ஒற்றுமையுடன் செயற்படல், விட்டுக்கொடுத்துச் செயலாற்றல்,மற்றவர்க்கு உதவுதல், மற்றவர் கருத்தினை மதித்தல்

போன்றன குழுச் செயற்பாடுகளின்போது பின்பற்றப்படுவதால், அவை நல்ல விழுமியச் செயற்பாடுகளுக்கு உறுதுணையாவன என்று வரவேற்பை பெறுகின்றன.

இங்கும் பெற்றோர், பெரியோர், ஆசிரியர்கள் முன்மாதிரியான வர்களாக, முழுமையான விழுமிய நடைமுறைகளைப் பின்பற்றுபவராக வாழ்ந்து காட்டினால் பிள்ளைகள் அவற்றைப் பின் பற்றுவதில் தடையிருக்க முடியாது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

**வருமுன் காத்தல்**

எந்தவொரு விழுமிய நடத்தைகளையும் வற்புறுத்தியோ அல்லது முரணாக நடந்தபின் தண்டனைகள் வழங்குவதன் மூலமோ பிள்ளைகளிடம் நிலைபெற்று விடச் செய்ய முடியாது.

தண்டனைகள் அவற்றை வலுப்படுத்திவிடலாம் என்பதும் எக்காரியத் தையும் பிள்ளை விருப்புடன் செய்தாலே அது நீண்டகாலம் நிலைத்து பயன் தரும் என்பதும் உளவியலார் கருத்து.

எனவே, முரணான விழுமிய நடத்தைகள் தோன்றுமுன் தடுத்து நெறிப் படுத்தலும் அவ்விழுமிய நடத்தைகளின் சிறப்பை உணர வைத்துப் பிள்ளை களை விருப்புடன் அவற்றைப் பின்பற்ற வைத்தலும் நல்ல பயனைத்தரலாம்..

*வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்*
*வைத்தூறு போலக் கெடும்.* *குறள்-435*


என, வள்ளுவரும் கூறியிருக்கின்றார். இதனை நன்குணர்ந்த கல்வி அமைச்சும் விழுமியத்துக்கு முரணான செயற்பாடுகளை முன்கூட்டியே தடுப்பதற்கு சில முன்னேற்பாடுகளைச் செய்யுமாறு சில யோசனைகளை முன்வைத்துள்ளது. சிறப்பாக, ஒவ்வொரு பாடசாலையிலும் அதிபர், ஆசிரியர், பெற்றோர், சமயத்தலைவர், வைத்தியர், பொலிசார், சமூக சேவையாளர் இணைந்து ஒரு குழுவாகச் செயற்பட்டு முரணான நடத்தைகள் மாணவரிடை தோன்றாதவாறு முன்கூட்டியே அணை போடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டவேண்டுமென எதிர்பார்க்கின்றார்கள்.

அதற்காக விழிப்புணர்வுச் செயற்றிட்டங்கள், விசேட செயலமர்வுகள், களப்பயிற்சிகள், ஊடகங்கள் ஊடாக விழிப்புணர்வு நடவடிக்கைகளை

மேற்கொள்ளல், சுவரொட்டிகள், பதாதைகள், ஓவியங்கள் காட்சிப்படுத்தல், பொருத்தமான கையேடுகளைத் தயாரித்து வழங்கல், சமய பண்பாட்டு கலாசார நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்தல் போன்றன அங்கு சிபார்சு செய்யப்படுகின்றன.

இவ்வகையில், ஆன்மீக விழுமியக் கல்வியை பல பரிமானங்களில் மாணவர்களுக்குக் கற்பிக்க முடியும் என்று கூறப்படுகின்றது. விழுமிய செயற்பாடுகளின் மூலக் கூறுகள் பின்வரும் ஆறு கருநிலைகளில் இருந்து பெறப்படுகின்றன. அவை; ஆன்மீகம் தொடர்பான சமயக் கருத்துக்கள், தத்துவக் கருத்துக்கள், இலக்கியங்கள், ஓவியங்கள்/சித்திரங்கள்,சமூக பழக்க வழக்கங்கள் மற்றும் அழகியல் சார்ந்த செயற்பாடுகள் என்பவையாகும்.

**விழுமியக் கல்வியின் பல்பரிமாண விபரணச் சட்டகம்.**



இவ்வாறான சூழ்நிலையின் நேர்மறைத் தாக்கங்களுடன் வாழும் மாணவர் சிறந்த பண்பாட்டு விழுமியங்களைக் கைக்கொள்வது சாத்திய மாகும். ஒரு பண்பாட்டைச் சேர்ந்தோரின் வாழ்வியலுக்கும் செயல்களுக்கும் நடத்தைகளுக்கும் எவை எவை அவசியமென்று கருதப்படுகின்றதோ அவையே அப்பண்பாட்டின் விழுமியங்கள் ஆகும். மக்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து வாழ முற்படும் போது எவை எவை எல்லாம் இன்றியமை யாதது எனத் தென்படுகின்றதோ அவை பண்பாட்டு விழுமியங்கள் எனப்படும்.

*- பேராசிரியர் பக்தவத்சலபாரதி (பண்பாட்டு மானிடவியல்)*

இங்கு பேராசிரியர் பக்தவக்சலபாரதி அவர்களது கருத்தினை ஆழ்ந்து கவனித்தல் வேண்டும்.

சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பண்பாட்டு விழுமிய அம்சங்களை கற்றுக் கொடுப்பதில் வயது வேறுபாட்டிற்கேற்ப வேறு வேறு நபர்கள் செவாக்குச் செலுத்துவர்.

வயது 1 – 5 பெற்றோர்
வயது 6 –13 ஆசிரியர்
வயது 14 –20 சகபாடிகள், சமூக ஊடகங்கள்

இங்கு வேறுபட்ட நபர்கள் செல்வாக்குக் கொண்டாலும் விழுமியங்கள் ஊடாக நல்லொழுக்கங்களை ஏற்படுத்துவதில் மாணவர் மனப்பாங்கில் ஏற்படுத்த வேண்டிய மாற்றமே முக்கியம். மனப்பாங்கு மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே இத்தகைய விடயங்கள் மனதில் பதிய வைக்க முடியும்.

இதற்கு தனித்து வகுப்பறைக் கற்பித்தலோ அல்லது வாய்மொழி உபதேசமோ போதுமான அணுகு முறையாகாது. புதிய முறையில் வேறு வேறு அனுபவங்களை வழங்குவதன் மூலமே மனப்பாங்கு மாற்றத்தை இலகுவாக ஏற்படுத்தமுடியும்.

பதின்ம வயதில் சகபாடிகள் வேறு வேறு அனுபவங்களை வழங்கும் இயல்பு கொண்டவர்களாக இருப்பார். அதனால் அவர்களின் செல்வாக்கு பிள்ளைகளைக் கவர்ந்து கொள்கின்றது.

அதைப் போன்று இளம் வயதினருக்கும் குழந்தைகளுக்கும் மற்றும் பதின்ம வயதினருக்கும் சரியான நம்பிக்கைகளையும் நடைமுறை களையும் மூத்தோரும் ஏனையோரும் நவீன ஊடகங்களும் வேறுவேறு அனுப வங்கள் மூலம் வழிகாட்டல்களை மேற்கொண்டு மனமாற்றத்தினைத் தோற்றுவித்து விழுமியப் பண்புகளை இயல்பாகக் கற்றுக் கொள்கின்ற சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும்.

குறிப்பாக, குழந்தைகளுக்கும், இளையோருக்கும் மனிதப் பண்பினை இறுக்கமாக அவர்கள் மனதில் பதியும் வண்ணம் செய்தல் வேண்டும்.

**நிறைவாக**

அன்புசால் முகிழ் நிலை ஆசிரியர்களே, பெரியோர்களே, இன்று எமது சமூகத்தின் நிலையினை உன்னிப்பாக அவதானித்து உணர்ந்து கொள்ளுங்கள். அங்கே பெரும் வெறுமையும் விரக்தியும் வேதனையும் மலிந்துள்ளதைக் காண்பீர்கள்.

மாலுமியில்லாத கப்பல் போன்று எமது வாழ்க்கையெனும் கப்பல் திசையறியாது தத்தளிக்கின்றது. நல்ல வழிகாட்டிகள் இல்லை. நல்ல தலைவர்கள் இல்லை.

வெட்டேந்திகளும், பச்சோந்திகளும்,சுயநலவாதிகளுமே மலிந்து காணப்படுகின்றார்கள். எமது சமூகத்தில் என்றுமே நடந்திராத சகோதரக் கொலைகள், வன்புணர்வுகள், களவுகள், கொள்ளைகள்,போதைப் பாவனைகள்?

ஏன் இந்த நிலை?எமது சமூகம் எங்கே போகின்றது?சிந்தியுங்கள்!

எதிர்காலச் சமூகத்தை உருவாக்கவுள்ள இளம் சிற்பிகளே, என் அன்புக்குரிய முகிழ்நிலை ஆசிரியர்களே, கல்விச் சமூகமே இந்தக் கையறுநிலை போக்க கங்கணம் கொள்ளுங்கள்.

என்னால் என்ன செய்யமுடியும்? என்று தாழ்வுச் சிந்தனை கொள்ளாதீர்கள்.

என்னால் முடியும் என்ற முழு நம்பிக்கையுடன் நல்லது செய்ய முயற்சி செய்யுங்கள். நிச்சயம் வெற்றி கிட்டும். வெற்றி கிட்டாவிட்டாலும் பரவாயில்லை. முயற்சி செய்தோம் என்ற திருப்தி பெரிதாகும்.

தொடர்ந்து முயற்சி செய்தால் என்றோ ஒருநாள் வெற்றி தேடி வரும்.

போரில் தோற்ற மன்னன் எதிரிக்குப் பயந்து குகையொன்றில் மறைந்திருந்து அங்கே சிலந்தி ஒன்றின் செயலை அவதானித்து மீண்டும் முயற்சித்து வெற்றி பெற்ற வரலாற்றை நினைவிற் கொண்டு செயற்படுங்கள்.

உங்கள் முயற்சியில் ஒரு நேர்த்தன்மை (positive) இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். அதுவே உயர் விழுமிய செயற்பாடாகும்.அது நிச்சயம் வெற்றியைத் தேடித் தரும்.

விழுமியக் கருத்துக்களையும் ஆன்மீக அறத்தையும் மாணவர் மனதில் ஆழமாகப் பதிய வையுங்கள். அது எமது சமூக இருப்புக்கும் உயர்வுக்கும் உதவி நிற்கும்.

நன்றி

**உசாத்துணை**


1 விழுமியக் கல்வி – சமய விழுமியக் கல்வியியல் துறை,தேசிய கல்வி நிறுவகம், மகரகம, 2015

2 சமூக மனவெழுச்சிப் பிரவேசத் திறன்கள்,பாடசாலை அலுவல்கள் கிளை,கல்வி அமைச்சு, இசுருபாயா, பத்தரமுல்லை , 2022.

3 இந்துசமய அறநெறிக் கல்வி –இந்துசமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு,2019

4 உள நல ஆதரவு–ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம்,கல்வி அமைச்சு, இசுருபாயா ,பத்தரமுல்ல 2021

5 முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன் – உலக்குவிப்பும் கற்றலும் நல்லூர் சைவத் தமிழ் பண்பாட்டுக் கலைக் கூடல் 2021.

6 Dale Carnegie -How to win friends and Influence people 2015

7 Jill Dann -Test your emotional intelligence, London Institute of management 2004

# பேராசிரியர் சு. வித்தியானந்தன்
# வாழ்க்கைக் குறிப்பு

1. இயற்பெயர் – வித்தியானந்தன்
2. புனைபெயர்கள் – பிறையன்பன், கலைமகிழ்நன், மலைவாணன்
3. தந்தை பெயர் – சி. சுப்பிரமணியம்
4. தாய் பெயர் – சு. முத்தம்மா
5. பிறந்த திகதி – 08.05.1924
6. பிறந்த ஊர் – வீமன்காமம், தெல்லிப்பழை
7. ஆரம்பக் கல்வி – வீமன்காமம் தமிழ்ப் பாடசாலை
8. இடைநிலைக் கல்வி – தெல்லிப்பழை தமிழ் ஆங்கிலக் கல்லூரி
   (இது தற்போது யா/யூனியன் கல்லூரி
   என வழங்கப்படுகின்றது)
   யா/பரி. யோவான் கல்லூரி
   யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
9. பட்டப் படிப்பு –
   - இலங்கைப் பல்கலைக்கழகம்
     1941–1944 : தமிழ் சிறப்புக்
     கலைமாணிப்பட்டம்
   - 946 முதுகலைமாணிப்பட்டம்
   - 1948–1950 : கலாநிதிப்பட்டம்
     லண்டன் ஒக்ஸ்பேர்ட் பல்கலைக்கழகம்
10. நியமனம் – 1946 : தமிழ்த்துறை உதவி விரிவுரையாளர்
    1970 : பேராதனைப் பல்கலைக்கழக
    தமிழ்த்துறைத் தலைவர்
11. திருமணம் – 1957
12. மனைவி பெயர் – கமலாதேவி
13. பிள்ளைகள் பெயர் – அருள்நம்பி, மகிழ்நங்கை, அன்புச்செல்வி,
    இன்பச்செல்வன், சிவமைந்தன்
14. யாழ்ப்பாண வளாகத் தலைவர் நியமனம் – 1977
15. யாழ்ப்பாண பல்கலைக்கழக முதல் துணைவேந்தர் நியமனமும்
    சேவைக்காலமும் – 1979 1989
16. மறைவு – 21.01.1989 (அகவை 64)